
# திருக் குர்ஆன் கூறும்

# அன்னை மேரியும் இயேசு கிறிஸ்துவும்

مريم وعيسى عليه السلام في ضوء القرآن



لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

*உயிரோடு இருக்கும் காலம் வரை! மேலும், என் தாயின் கடமையை நிறைவேற்றுபவனாயும் என்னை ஆக்கினான். மேலும், முரடனாகவும், துர்ப்பாக்கியமுடையனாகவும் என்னை ஆக்கவில்லை. என் மீது சாந்தி உண்டாகும் - நான் பிறந்த நாளிலும், இறக்கும் நாளிலும், உயிரோடு மீண்டும் எழுப்பப்படும் நாளிலும்!''*

*திருக்குர்ஆன் 19:27-33*

இயேசு கிறிஸ்துவின் பதிலின் மூலம் அன்னை மர்யத்தின் கற்பின் தூய்மையை உலகுக்கு உணர்த்தி — அன்னாருடைய சமூகத்தாரின் அவதூறு பிரச்சாரத்துக்கு திருக் குர்ஆன் சாட்டையடி தந்தது! மேலும், அன்னை மர்யமோ அல்லது அவரது மகனார் இயேசு கிறிஸ்துவோ—இறைமையில் எந்த பங்கும் கொண்டிருக்கவில்லை என்பதையும் தெளிவுபடுத்தியது!

அதன் பிறகு, இயேசு கிறிஸ்துவின் விஷயத்தில் மக்கள் கொண்டிருந்த ஐயப்பாடுகளுக்கு பதில் தர ஆரம்பித்தது:-

*''இவர்தான் மர்யமின் குமாரர் ஈஸா! இதுதான் இவரைக் குறித்து மக்கள் ஐயம் கொண்டிருக்கும் விஷயத்தில் உண்மையான கூற்றாகும். எவரையும் மகனாக ஏற்றுக்கொள்வது அல்லாஹ்வின் நியதியல்ல! அவன் புனிதமானவன்; அவன் ஒரு விஷயத்தைத் தீர்மானித்தால் 'ஆகிவிடு' என்றுதான் ஆணையிடுகின்றான்; அது உடனே ஆகிவிடுகின்றது.''*

*திருக்குர்ஆன் 19:34,35*

*மேலும் (ஈஸா கூறியிருந்தார்:) '' திண்ணமாக, என்னுடைய இறைவனும் உங்களுடைய இறைவனும் அல்லாஹ்தான்! எனவே, அவனுக்கே நீங்கள் அடிபணியுங்கள். இதுதான் நேரான வழியாகும்!''*

*திருக்குர்ஆன் 19:36*

அதன் பின்னர், கிறிஸ்தவர்களின் முக்கடவுள் கொள்கை குறித்து பதிலடி தரப்படுகின்றது!

கிறிஸ்தவர்கள் வாதிடும் முக்கடவுள் கொள்கையின் முதல் அம்சமான ***தந்தையான இறைவன்*** குறித்து பேசும்போது கூறுகின்றது:-

*திண்ணமாக, ''மர்யம் உடைய குமாரர் மஸீஹ்தான் அல்லாஹ்'' என்று கூறியவர்கள் சந்தேகமின்றி நிராகரித்தவர்களாகிவிட்டார்கள். உண்மையில் மஸீஹ் இப்படித்தான் கூறியிருந்தார்: ''இஸ்ராயீலின் வழித்தோன்றல்களே! என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவனுமாகிய அல்லாஹ்வையே வணங்குங்கள்!'' எவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்கின்றானோ, அவனுக்குத் திண்ணமாக அல்லாஹ் சுவனத்தைத் தடை செய்திருக்கின்றான். மேலும், அவனுடைய இருப்பிடம் நரகமாகும். மேலும், இத்தகைய அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வொர் யாருமில்லை!*

*திருக்குர்ஆன் 19:36*

முக்கடவுள் கொள்கையின் இரண்டாவது அம்சமான ***தமயனான இறைவன்*** குறித்து பேசும்போது கூறுகின்றது:-

*''உஸைர் அல்லாஹ்வின் புதல்வர்'' என்று யூதர்கள் கூறுகின்றார்கள். ''மஸீஹ் - இயேசு - அல்லாஹ்வின் புதல்வர்'' என்று கிறிஸ்தவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் தங்களுடைய நாவினால் கூறும் (உண்மைக்குப் புறம்பான) கூற்றுக்களாகும் இவை! இவர்களுக்கு முன்னர் இறைநிராகரிப்பை மேற்கொண்டிருந்தவர்கள் கூறியதைப் போல் இவர்களும் கூறுகின்றனர். அல்லாஹ் இவர்களை நாசப்படுத்துவானாக! அவர்கள் எவ்வாறு திசை திருப்பப்படுகின்றார்கள்! அவர்கள் அல்லாஹ்வை விடுத்து மார்க்க மேதைகளையும், துறவிகளையும் தங்களின் ரப் - கடவுளராக்கிக் கொண்டார்கள். மேலும் இதேபோன்று மர்யத்தின் குமாரர் மஸீஹையும் (இயேசுவையும் - இறைவனாக்கிக் கொண்டனர்)!*

*உண்மை யாதெனில், ஒரே இறைவனைத் தவிர வேறெவரையும் வணங்க அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டதில்லை. வணக்கத்திற்குரிய இறைவன் அவனையன்றி யாரும் இல்லை. அவர்கள் செய்யும் இணைவைப்புச் செயல்களிலிருந்து அவன் தூய்மையானவன்!*

*திருக் குர்ஆன் 9:30*

முக்கடவுள் கொள்கையின் மூன்றாவது அம்சமான ***பரிசுத்த ஆவியாகிய இறைவன்*** குறித்து பேசும்போது திருக் குர்ஆன் கூறுகின்றது:-

*நிச்சயமாக, அல்லாஹ் (பிதா, மகன், பரிசுத்த ஆவியாகிய) மூவரில் மூன்றாமவன் என்று கூறியவர்களும் திண்ணமாக நிராகரிப்பாளர்களாகிவிட்டார்கள்.*

*உண்மையில் ஒரே இறைவனைத் தவிர வேறு எந்த இறைவனுமில்லை.*

*தாம் இவ்வாறு கூறுவதிலிருந்து அவர்கள் விலகிக் கொள்ளவில்லையாயின், இத்தகைய நிராகரிப்பாளர்கள் அனைவர்க்கும் துன்புறுத்தும் தண்டனை கொடுக்கப்பட்டே தீரும்.*

*(அவ்வாறிருக்க) அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் மீண்டு அவனிடத்தில் பாவமன்னிப்பு கோரிட வேண்டாமா? மேலும், அல்லாஹ் பெரிதும் மன்னிப்பு வழங்குபவனும், மாபெரும் கருணையாளனும் ஆவான்.*

*திருக்குர்ஆன் 5:73,74*

இப்பொழுது இயேசு கிறிஸ்துவின் உண்மையான அந்தஸ்து குறித்து திருக்குர்ஆன் பேசுகின்றது:-

*திண்ணமாக, அல்லாஹ்விடத்தில் ஈஸா-இயேசுவின் உவமை ஆதத்தைப் போன்றதாகும். அல்லாஹ் அவரை மண்ணினால் படைத்தான். பிறகு 'ஆகுக' என்று கட்டளையிட்டான். உடனே அவர் ஆகிவிட்டார்!*

*திருக் குர்ஆன் 3:59*

*மர்யத்தின் குமாரர் மஸீஹ் (இயேசு கிறிஸ்து) ஓர் இறைத்தூதரேயன்றி வேறில்லை. அவருக்கு முன் இறைத்தூதர்கள் பலர் சென்றிருக்கின்றார்கள். மேலும், அவருடைய அன்னை வாய்மையுள்ள ஒரு பெண்மணியாவார். அவ்விருவரும் உணவு உண்பவர்களாகவே இருந்தார்கள். பாருங்கள்! நாம் (சத்தியத்திற்கான) சான்றுகளை எவ்வாறெல்லாம் அவர்களுக்குத் தெளிவாக்குகின்றோம். மீண்டும் பாருங்கள்; அவர்கள் எவ்வாறெல்லாம் உண்மையை விட்டுப் பிறழ்ந்து செல்கின்றார்கள்!*

*திருக் குர்ஆன் 5:75*

அடுத்து, கிறிஸ்தவர்கள் உட்பட வேதம் அருளப்பட்ட மக்களுக்கு இவ்வாறு குர்ஆன் எச்சரிக்கை விடுக்கின்றது:-

*(முஹம்மதே!) நீர் அவர்களிடம் கூறுவீராக! அல்லாஹ்வை விடுத்து உங்களுக்கு இழப்பையோ இலாபத்தையோ அளிப்பதற்கு சக்தியில்லாதவற்றையா நீங்கள் வணங்குகின்றீர்கள்? ஆனால் அல்லாஹ்தான் யாவற்றையும் செவியேற்பவனும் நன்கு அறிபவனும் ஆவான்'' நீர் கூறும்: ''வேதம் அருளப்பட்டவர்களே! உங்கள் தீனில் (நெறியில்) அநியாயமாக எதையும் மிகைப்படுத்தாதீர்கள்! மேலும், உங்களுக்கு முன்னர் தாமும் வழிகெட்டு, பலரையும் வழிகெடுத்து மேலும், நேரிய வழியிலிருந்து தடம்புரண்டு போன மக்களுடைய விருப்பங்களை நீங்கள் பின்பற்றாதீர்கள்!*

*திருக் குர்ஆன் 5:76,77*

இனி பாருங்கள், சத்தியத்துக்கு தலைவணங்கும் கிறிஸ்தவர்கள் குறித்து திருக் குர்ஆன் எவ்வாறு போற்றுகின்றது என்பதை!

*நிச்சயமாக நாம் கிறிஸ்தவர்களே என்று சொல்பவர்கள்தாம் மற்ற அனைவரையும்விட இறைநம்பிக்கையாளர்களுடன் நேசம் கொண்டிருப்பதை (முஹம்மதே!) நீர் நிச்சயமாகக் காண்பீர்! இதற்குக் காரணம் அவர்களுள் வணக்கத்தில் திளைத்த அறிஞர்களும் ஆழ்ந்த துறவு மனப்பாங்கு கொண்டவர்களும் இருப்பதே! அத்தோடு அவர்கள் அகந்தை கொண்டவர்களாகவும் இல்லை. இறைத்தூதர் மீது இறங்கியவற்றை அவர்கள் செவியுறும்போது சத்தியத்தை தாம் அறிந்துகொண்டதன் விளைவாக, அவர்களின் கண்கள் கண்ணீர் சிந்துவதை நீர் காண்பீர்! எங்கள் இறைவா! நாங்கள் நம்பிக்கை கொண்டோம். எனவே எங்களை சாட்சி வழங்குபவர்களுடன் எழுதுவாயாக!*

*திருக்குர்ஆன் 5:82*

கிறிஸ்தவர்களை முஸ்லிம்களுக்கு மிக நெருக்கமானவர்கள் என்று திருக் குர்ஆன் சான்று பகர்கின்றது. வரலாறு இதற்கு சாட்சியாக உள்ளது. இஸ்லாத்தின் தூதை ஏற்ற கிறிஸ்தவர்கள் நிறைய பேர்! அதற்கு உதவியவர்கள் பெருந்தொகையினர்! இன்றும் மேற்குலக கிறிஸ்தவ நாடுகளில் இஸ்லாத்தை தழுவுவோர் வீதம் அதிகமாகவே உள்ளது!

வாருங்கள்!

சத்தியம் எங்கிருந்து வருகின்றது என்பதை நோக்காமல் எவ்வித தயக்கமுமின்றி சத்தியத்துக்காக மட்டுமே அதனை ஏற்பதுதான் மனிதப் பண்பின் உச்சகட்ட சிறப்பம்சமாகும்!

دار التعريف بالإسلام
Islam Presentation
Bookshop

للمساهمة معنا في مشروع طباعة الكتب

www.ipc-kw.com 208 : داخلى 2444117 - 2427383

Fahad Salem St. Al-Mulla Saleh Mosque P.O.Box:1613 Safat 13017
Tel.: 2444117 - Fax: 2400057 e-mail:ipb@ipc-kw.com

## திருக்குர்ஆன் கூறும்

# இயேசுவும் அன்னை மர்யமும்

மனிதர்களால் பெரும்பாலும் மறக்கப்பட்டுவிட்ட— எவ்வித ஆதாரமும் இன்றி முற்றிலுமாக திரித்தும் பிரித்தும் கூறப்பட்டு வருகின்ற ஒரு சில இஸ்லாமிய அம்சங்களில் அன்னை மேரி எனப்படுகின்ற மர்யம் (அலை) மற்றும் அவரது மைந்தரான இயேசு கிறிஸ்து எனப்படுகின்ற ஈஸா (அலை) ஆகியோர் குறித்த விஷயமும் ஒன்றாகும்!

இந்த அம்சம் குறித்த உண்மையான விளக்கங்களைத் தருவதே இச்சிறு மடக்கோலையின் தலையாய நோக்கமாகும்.

மேலும், இறைத்தூதின் அடிப்படை உண்மையொன்றை மட்டும் கிறிஸ்தவர்களுக்கு சுட்டிக்காட்ட முயற்சிப்பதும் இதன் அடுத்த நோக்கமாகும்.

அன்றி, மற்றவரை சாடுவதற்காகவோ, எவரையும் திருப்திபடுத்துவதற்காகவோ அல்ல! ஏனெனில், மக்களை நேர்வழிப்படுத்தவும்–குழப்பமற்ற—தெளிவான சமூகத்தை உருவாக்க விரும்பும் இஸ்லாம் இதுபோன்ற விஷயங்களை விரும்புவதுமில்லை; ஊக்கப்படுத்துவதுமில்லை! மாறாக, தன்னைப் பின்பற்றும் மக்களிடத்தில் அது தூய்மையான எண்ணங்களையும், நேரிய செயல்களையுமே எதிர்பார்க்கின்றது!

எனவே, சத்தியத்தை அதன் உண்மைக்காகவே கண்டுபிடித்து வெளிப்படுத்துவதும், அந்த சத்தியத்தை உரியவர்கள் மனத்தில் பதியும்படி ஆக்கபூர்வமான முறையில் எடுத்துக்காட்டுவதுமே ஒரே இறைவனை மட்டுமே நம்பும் ஓர் உண்மையான இறைநம்பிக்கையாளனின் பணியாகும். இந்த சத்தியத்தை செவிமடுப்போர் எவ்வித மனமாச்சர்யமுமின்றி தாங்களாகவே அலசி ஆராய்ந்து ஓர் உண்மையான முடிவுக்கு வர வேண்டும். அவர்கள் முடிவெடுப்பதற்கு எந்தவித பலவந்தமோ–இயலாமையோ காரணமாக அமைந்துவிடக் கூடாது. மாறாக, இந்த சத்தியத்தை அறிவும், பொறுப்பும், கடமையும் நிறைந்தவர்கள் எனும் அளவிலேயே அவர்கள் அணுகுவார்கள் – நோக்குவார்கள் என நம்புவோம்!

எல்லா இறைத்தூதர்களும் இறைவன் ஒருவனே எனும் ஏகத்துவத்தையே அறிவுறுத்தினார்கள்! ஈஸா (அலை) அவர்களும் இந்த அடிப்படைச் செய்தியையே கொண்டு வந்தார்கள்!

இனி முதலில் –

உலக மக்கள் அனைவருக்கும் ஓர் நல்லுரையாக வந்துள்ள திருக் குர்ஆன் மேரி எனப்படுகின்ற அன்னை மர்யம் (அலை) அவர்கள் குறித்து உரைப்பதை முதலில் காண்போம்.

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில், அன்னை மர்யம் (அலை) அவர்கள், ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் அருளால் ஈஸா (அலை) அவர்களைப் பெற்றெடுத்த ஓர் அற்புதப் பெண்மணி ஆவார். எனவேதான், கிறிஸ்தவர்கள்கூட தராத அந்தஸ்தை இஸ்லாம் அவர்களுக்கு வழங்கியது:–
அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
*“உலகப் பெண்கள் அனைவரிலும் மிகவும் சிறந்தவர்கள் நால்வர்: இம்ரானின் புதல்வி மர்யம், ஃபிர்அவ்னின் மனைவி ஆசியா, குவைலிதின் மகள் கதீஜா, முஹம்மத் (ஸல்) அவர்களது மகள் ஃபாத்திமா (அல்லாஹ் இவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக)” (ஆதாரம்:புஹாரி, முஸ்லிம்)*

மேலும், அன்னை மர்யம் (அலை) அவர்களின் பெயரில் ஒரு முழு அத்தியாயத்தையே (எண் 19) திருக் குர்ஆன் கொண்டுள்ளது என்பதும் கிறிஸ்தவர்களின் புனித நூலான பைபிள்கூட அந்த தூய அன்னைக்கு தாரத மற்றொரு சிறப்பம்சமாகும். அதுமட்டுமல்ல, திருக் குர்ஆனின் இன்னபிற அத்தியாயங்கள் அன்னை மர்யம் (அலை) அவர்கள் பற்றி பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, அதன் 2–ஆவது அத்தியாயமான ‘ஆலு இம்ரான்’ – இம்ரானின் வழித்தோன்றல்கள் மற்றும் 19–ஆவது அத்தியாயமான ‘மர்யம்’ ஆகிய அத்தியாயங்கள் அன்னை மர்யம் அவர்கள் குறித்துப் பேசுகின்றன.

இறைப்பணிக்கு அர்ப்பணிக்க ஆண்குழந்தை விரும்பிய தனக்கு பெண்குழந்தையாக மர்யம் பிறந்தபோது அவர்களின் தாயார் சற்று மனம் வருந்தினார். எனினும், மனம் தளராதவராய் அந்த குழந்தைக்காகவும் அதன் வருங்கால சந்ததிக்காகவும் சபிக்கப்பட்ட சாத்தானின் தீங்கை விட்டும் இறைவனிடம் பாதுகாவல் தேடினார். அவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட இறைவன், அகிலத்துப் பெண்கள் அனைவரினும் அப்பெண்குழந்தையை அன்போடு தேர்ந்தெடுத்துத் தூய்மையாக்கினான். பின்னர், யஹ்யா (அலை) அவர்களின் தந்தையாகிய ஜக்கரிய்யா (அலை) அவர்களை அன்னை மர்யத்தின் பாதுகாவலராய் ஆக்கினான்.

இந்த வரலாற்றை திருக் குர்ஆன் இவ்வாறு பேசுகின்றது:–

*இம்ரானைச் சார்ந்த பெண் (கர்ப்பம் தரித்தபோது) “என் இறைவனே! நான் எனது வயிற்றில் இருக்கும் குழந்தையை உனது திருப்பணிக்காக அர்ப்பணிக்க நேர்ச்சை செய்துள்ளேன். எனவே, இதனை (காணிக்கையை) என்னிடமிருந்து ஏற்றுக்கொள்வாயாக! திண்ணமாக, நீ நன்கு செவியேற்பவனாகவும், அறிபவனாகவும் இருக்கின்றாய்!” என்று இறைஞ்சிக் கொண்டிருந்ததையும் அல்லாஹ் செவியுற்றவனாகவே இருந்தான்.*

*பிறகு அவள் அதைப் (பெண்குழந்தையாகப்) பெற்றெடுத்தபோது கூறினாள்: “என் இறைவா! நான் அதைப் பெண் குழந்தையாய்ப் பெற்றுவிட்டேனே!” – ஆயினும், அவள் எதைப் பெற்றெடுத்தாளோ அதைப் பற்றி அல்லாஹ் மிகவும் அறிந்தவன்– “மேலும் ஆண்குழந்தை பெண் குழந்தையைப் போலன்று; நான் அக்குழந்தைக்கு ‘மர்யம்’ எனப் பெயர் சூட்டியுள்ளேன். மேலும், நான் அக்குழந்தைக்காகவும் அதன் வருங்கால வழித்தோன்றலுக்காகவும் சபிக்கப்பட்ட சாத்தா(னின் தீங்கி)னை விட்டு உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றேன்.”*

*திருக்குர்ஆன் 3:35,36*

அதன் பின்னர், மர்யத்தின் மீது தான் பொழிந்த அருட்கொடைகளைப் பற்றி திருக் குர்ஆனில் இறைவன் இவ்வாறு கூற ஆரம்பிக்கின்றான்:

*…மர்யம் இருந்த மாடத்தினுள் ஜகரிய்யா செல்லும்போதெல்லாம், ஏதேனும் உணவுப்பொருள் அவளிடத்தில் இருப்பதைக் காண்பார். “மர்யமே! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது?” எனக் கேட்பார். “இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது. தான் நாடியவர்களுக்குத் திண்ணமாக அல்லாஹ் கணக்கின்றி வழங்குகின்றான்” என்று மர்யம் பதிலுரைப்பார்.*

*திருக்குர்ஆன் 3:37*

அன்னை மர்யம் அவர்களைப் பொறுத்த வரை– இறுதி இறைவேதமான திருக் குர்ஆன் அவரை உலகப் பெண்கள் அனைவரினும் முன்மாதிரியானவர், பரிசுத்தமானவர் என்று சான்று பகர்ந்து வாழ்த்துகின்றது:–

*மேலும், அந்நேரம் வந்தபோது வானவர்கள் கூறினார்கள்: “மர்யமே! திண்ணமாக அல்லாஹ் உன்னைத் தேர்ந்தெடுத்துத் தூய்மையாக்கினான். மேலும், அகிலத்துப் பெண்கள் அனைவரினும் (உனக்கு முதலிடம் அளித்து, தனது திருப்பணிக்காக) உன்னைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்!…”*

மற்றொருபுறம், அன்னை மர்யமின் சிறந்த பண்புகளுக்கெதிராகப் பொய்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபோது, அதனை முறியடித்து திருக் குர்ஆன் பல இடங்களில் அன்னை மர்யத்தைப் புகழ்கின்றது.

…மேலும், அவர்கள் தம் நிராகரிப்பி(ல் எல்லை மீறிவிட்டத)னாலும் மர்யம் மீது பெரியதொரு அவதூறை அவர்கள் கூறியதாலும் (அல்லாஹ் அவர்களை சபித்துவிட்டான்!)

*திருக்குர்ஆன் 4:156*

அன்னை மர்யம் அவர்களின் மூலம் இயேசு கிறிஸ்து எனப்படுகின்ற ஈஸா (அலை) அவர்களை உலகுக்கு அளித்த வரலாற்றை இறைவன் விவரமாக திருக் குர்ஆனில் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாயிலாக உள்ளங்கை நெல்லிக்கனி போல எவ்வித குழப்பமுமின்றி எடுத்துக் கூறுகின்றான்:–

*மேலும், (முஹம்மதே!) மர்யத்தைப் பற்றி இந்த வேதத்தில் (உள்ளதை) நீர் விவரித்துக் கூறுவீராக! அவர் தம்முடைய குடும்பத்தாரை விட்டு விலகி கிழக்குப் பக்கமாக ஒதுங்கியிருந்த நேரத்தில் அவர் ஒரு திரையிட்டு அவர்களிலிருந்து மறைந்திருந்தார். (அப்போது) நாம் அவரிடம் நம்முடைய ரூஹை (வானவரை) அனுப்பினோம். அவர் மர்யத்தின் முன்னிலையில் முழு மனித உருவில் தோன்றினார்.*

*உடனே மர்யம் கூறினார்: “உம்மை விட்டு கருணை மிக்க இறைவனிடம் நான் பாதுகாவல் கோருகின்றேன், நீர் இறையச்சம் உள்ளவராயின்!”*

*அதற்கு அவர் கூறினார்: “நான் உம் இறைவனின் தூதராவேன்; தூய்மையான ஓர் ஆண்குழந்தையை உமக்கு வழங்குவதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன்.”*

*மர்யம் கூறினார்: “எனக்கு எவ்வாறு ஆண் குழந்தை பிறக்கும்? என்னை எந்த மனிதனும் தீண்டவில்லையே; நான் தீய நடத்தையுடையவளும் அல்லவே!”*

*அதற்கு வானவர் கூறினார்: “ அவ்வாறே நிகழும்.”*

*உம் இறைவன் கூறுகின்றான்: “ அவ்வாறு செய்வது எனக்கு மிகவும் எளிதானது; மேலும், நாம் அக்குழந்தையை மக்களுக்கு ஒரு சான்றாகவும் நம்மிடமிருந்து ஒரு கருணையாகவும் ஆக்குவதற்காகவே இவ்வாறு செய்கின்றோம். மேலும், அது நடந்தே தீரும்!”*

*திருக்குர்ஆன் 16:21*

*பின்னர், மர்யம் அக்குழந்தையைக் கர்ப்பம் தரித்தார். கர்ப்பத்தோடு அவர் தொலைவான ஓர் இடத்துக்கு ஒதுங்கிச் சென்றார். பிரசவ வேதனை அவரை ஒரு பேரீச்சை மரத்தடியின் பக்கம் கொண்டு வந்து சேர்த்தது.*

*அப்போது அவர், “அந்தோ! நான் இதற்கு முன்னரே மரணமடைந்து முற்றிலும் மறக்கடிக்கப்பட்டுப் போயிருந்திருக்கக் கூடாதா?” என்று கூறலானார்.*

*அப்பொழுது கீழே இருந்து ஒரு வானவர் அவரை அழைத்துக் கூறினார்: “நீர் கவலைப்படாதீர்; உம் இறைவன் உமக்குக் கீழே ஒரு நீரூற்றை அமைத்துள்ளான். மேலும், பேரீச்சை மரத்தின் அடிப்பகுதியைப் பிடித்து சற்று உலுக்கும். அது உம்மீது புத்தம் புதிய பேரீச்சம் பழங்களை உதிர்க்கும்; ஆக, நீர் புசித்தும் பருகியும் கண் குளிர்ந்திருப்பீராக! பிறகு, மனிதரில் எவரையேனும் நீர் கண்டால் (அவரிடம்) கூறிவிடும்: “கருணை மிக்க இறைவனுக்காக நோன்பு நோற்க வேண்டுமென நான் நேர்ந்திருக்கின்றேன். ஆதலால், இன்று நான் எவரிடமும் பேசமாட்டேன்!”*

*திருக்குர்ஆன் 16:22–26*

அன்னை மர்யம் இறைவனின் அருளால் ஓர் ஆண்மகவை பெற்றெடுத்தார்.

சற்றே சிந்தியுங்கள்!

மணமாகாத நிலையில் குழந்தையுடன் ஒரு கன்னிப்பெண் தனது சமூகத்தாரிடம் சென்றால் அந்த சமூகம் அவளை எவ்வாறு பார்க்கும்?

பாலின வேறுபாடுகள் அடியோடு மறைந்து திருமண பந்தத்துக்கு வெளியே குழந்தை பெற்றுக்கொள்ளும் மேலைக் கலாச்சாரத்தில் கூட திருமணம் செய்யாமல் ஒரு பெண் குழந்தை பெற்றால் அவளை அந்த சமூகம் எப்படி நோக்கும்?

ஆனால், இறைநாட்டம், இறையுதவி தனக்கு பக்கபலமாக இருந்ததால் அந்த மாபெரும் மங்கை மனம் தளரவில்லை. அவருக்கும் அவருடைய சமூகத்தாருக்கும் இடையிலான உரையாடலையும் – அந்த குழந்தையிடம் இருந்து வெளிப்பட்ட அதிசயத்தையும் திருக்குர்ஆன் இவ்வாறு படம் பிடித்துக் காட்டுகின்றது:–

*பிறகு, அவர் அக்குழந்தையைத் தூக்கிக்கொண்டு தம் சமூகத்தாரிடம் வந்தார். அவர்கள் கூறினர்: “மர்யமே! நீ ஒரு பெரும் பாவச்செயலைச் செய்துவிட்டாயே;! ஹாரூனின் சகோதரியே! உன் தந்தை கெட்ட மனிதராய் இருக்கவில்லை; உன் தாயும் தீயநடத்தையுடையவளாய் இருக்கவில்லை!”*

*அப்போது, மர்யம் குழந்தையின் பக்கம் சைக்கினை செய்தார்.*

*அதற்கு மக்கள் கேட்டார்கள்: “தொட்டிலில் இருக்கும் குழந்தையிடம் நாங்கள் எப்படிப் பேசுவது?”*

*உடனே குழந்தை கூறிற்று: “நான் அல்லாஹ்வின் அடிமை ஆவேன். அவன் எனக்கு வேதம் அருளினான்; என்னைத் தூதராகவும் ஆக்கினான். பெரும் பாக்கியமுடையவனாயும் ஆக்கினான்–நான் எங்கிருந்தாலும் சரியே! தொழுகை மற்றும் ஜகாத்தை நிறைவேற்றுமாறும் அவன் எனக்குக் கட்டளையிட்டிருக்கின்றான், நான்*